பக்கங்கள்: 07

காலைக்கதிர்

Kālaikkathir

மாலைப்பதிப்பு

சாயல் 03 வள்ளுவர் ஆண்டு 2053 ஆனி 07 செவ்வாய்க்கிழமை 21.06.2022 கதிர் 119

## முல்லையில் 715 லீற்றர் மண்ணெண்ணெய் மீட்பு

முல்லைத்தீவு உடையார்கட்டுப் பகுதியில் தமிழீழ விடுதலைப் புலிகளால் மறைத்து வைக்கப்பட்டிருந்ததாகச் சந்தேகிக்கப்படும் 715 லீற்றர் மண்ணெண்ணெய் மீட்கப்பட்டுள்ளது.

மேற்படி பிரதேசத்தில் தனியார் காணி ஒன்றில் கடந்த மே 31ஆம் திகதி முன்னெடுக்கப்பட்ட துப்புரவு பணிகளின்போது, புதைக்கப்பட்டிருந்த 7 ☞2

# அரச அடிமைகளே வாயை மூடுங்கள்; உங்களால் வீதியில் நடமாட முடியுமா?

### சகட்டுமேனிக்குக் கிழித்தார் சஜித்; சபை அமர்வை ஒரு வாரத்துக்குப் புறக்கணிப்பதாகவும் அறிவிப்பு



**அரச அடிமைகளே இது அதியுயர் சபை. பொய்களை உளறாமல் உங்கள் வாய்களை மூடுங்கள்.**

**- இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவரும் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவருமான சஜித் பிரேமதாஸ இன்றைய நாடாளுமன்ற அமர்வில் உரையாற்றும்போது ஆவேசத்துடன் தெரிவித்தார்.** ☞2

## சு.க., ஜே.வி.பியும் புறக்கணிப்பு





மைத்திரிபால சிறிசேன தலைமையிலான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, அநுரகுமார திஸாநாயக்க தலைமையிலான மக்கள் விடுதலை முன்னணி (ஜே.வி.பி.) என்பனவும் நாடாளுமன்ற அமர்வை ஒரு வாரத்துக்குப் புறக்கணிக்கத் தீர்மானித்துள்ளன.

இந்த நாடாளுமன்றத்தால் எந்தப் பிரயோசனமும் இல்லை என்பதால் நாம் ஒருவார கால அவகாசத்தை அரசுக்கு வழங்கி சபை அமர்விலிருந்து வெளியேறிச் செல்கின்றோம் என்று ஜே.வி.பியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க இன்றைய அமர்வில் உரையாற்றும்போது தெரிவித்தார்.

இதேவேளை, ஜனாதிபதி ☞2

## இந்தியத் துணைத் தூதரகத்தின் ஏற்பாட்டில் யாழில் இன்று சர்வதேச யோகா தின நிகழ்வு



(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணத்திலுள்ள இந்தியத் துணைத் தூதரகத்தின் ஏற்பாட்டில் இந்தியாவின் 65 ஆவது சுதந்திர தின ஆசாதிகா அம்ரித் மகோத்சவ் கொண்டாட்டங்களுடன் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள 8ஆவது சர்வதேச யோகா தின நிகழ்வுகள் இன்று யாழ்ப்பாணம் கலாசார மத்திய ☞2

## பேலியகொடை மெனிங் சந்தையில் குடும்பஸ்தர் ஒருவர் சுட்டுப் படுகொலை!




பேலியகொடை - மெனிங் சந்தையில் இன்று இடம்பெற்ற துப்பாக்கிச்சூட்டுச் சம்பவத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார் என்று பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது. ☞2

## வாக்களித்த 69 லட்சம் மக்களுக்கும் கோட்டாவின் பரிசு மரணதண்டனையே

### நகர சபை உறுப்பினர் ஒருவர் காட்டமான அறிக்கை



69 லட்சம் வாக்குகளைப் பெற்று பதவிக்கு வந்த கோட்டபாய ராஜபக்ஷ, தமக்கு வாக்களித்த நாட்டு மக்களுக்கு மரண தண்டனையைப் பரிசாக வழங்கியுள்ளார் என்று கிண்ணியா நகர சபை உறுப்பினர் எம். எம். மஹ்தி தெரிவித்துள்ளார்.

அவரால் இன்று வெளியிடப்பட்ட ஊடக அறிக்கையிலேயே மேற்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது. ☞2

### கசிப்பு விற்பனை வீட்டை முற்றுகையிட்ட

## வவுணதீவு பொலிஸ் மீது தாக்குதல்; 6 பெண்கள் உட்பட 12 பேர் மறியலில்



மட்டக்களப்பு, வவுணதீவு பொலிஸ் பிரிவிலுள்ள ஊத்துமடு - பாவக்கொடிசேனைப் பிரதேசத்தில் கசிப்பு விற்பனை செய்துவரும் வீடு ஒன்றை முற்றுகையிட்டு கசிப்பு வியாபாரியை கசிப்புடன் கைதுசெய்ய முற்பட்டபோது அங்கிருந்த குழு ஒன்று பொலிஸார் மீது மேற்கொண்ட தாக்குதலில் பொலிஸார் ஒருவர் காயமடைந்துள்ளார்.

அதேவேளை, பொலிஸ் வாகனத்தை உடைத்துச் சேதப்படுத்திய சம்பவம் தொடர்பாக 6 பெண்கள் உட்பட 12 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று வவுணதீவு பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி கே.டி.நிசந்த அப்புகாமி தெரிவித்துள்ளார்.

வவுணதீவு பொலிஸாருக்குக் கிடைத்த தகவலின் பிரகாரம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தலைமையிலான பொலிஸ் குழுவினர் ☞2

## யாழில் காலில் முள் குத்தி இளைஞர் பரிதாப மரணம்

காலில் முள் குத்தியதாக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட இளைஞர் ஒருவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

அராலி மேற்கு, வட்டுக்கோட்டையைச் சேர்ந்த தருமராசா மதிகரன் (வயது 28) எனும் இளைஞரே உயிரிழந்துள்ளார்.

கடந்த இரு வாரங்களுக்கு முன்னர் காலில் முள் ஒன்று குத்தியதாகவும், அவ்விடத்தில் வலி ஏற்பட்டுள்ளதாகக் கூறி வைத்தியசாலையில் சிகிச்சை பெற வந்த நிலையில் விடுதியில் சேர்க்கப்பட்டு இளைஞருக்கு சிகிச்சை அளிக்கப்பட்டது.

அந்நிலையில் இளைஞர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

### வெளிநாடுகளுக்கு அனுப்பப்படும்

## வீட்டுப் பணிப்பெண்களின் வயதெல்லையில் திருத்தம்



வீட்டு வேலைசார்ந்த பணிகளுக்காக வெளிநாடு செல்லும் இலங்கைப் பெண் பணியாளர்களின் குறைந்தபட்ச வயதெல்லையில் திருத்தம் செய்ய அமைச்சரவை அனுமதி அளித்துள்ளது.

வீட்டுப்பணிப்பெண்களாக சவுதி அரேபியாவுக்கு அனுப்பப்படுபவர்களின் ஆகக் குறைந்த வயதெல்லை 25 வயதாகவும், மத்திய கிழக்கு நாடுகளுக்கான ஆகக்குறைந்த வயதெல்லை 23 வயதுகளாகவும் மற்றும் பிற ☞2

## யாழ். மாநகர மேயருடன் கனேடியத் தூதுவர் பேச்சு



யாழ்ப்பாணம் மாநகர மேயர் வி.மணிவண்ணனைக் கனேடிய நாட்டுத் தூதுவர் இன்று காலை சந்தித்துக் கலந்துரையாடினார். ☞2

## வவுணதீவு பொலிஸ் மீது தாக்குதல்; ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
சம்பவ தினமான நேற்று முற்பகல் 11 மணியளவில் குறித்த வீட்டை முற்றுகையிட்டு அங்கு கசிப்பு வியாபாரத்தில் ஈடுபட்டுக் கொண்டிருந்த இளைஞர் ஒருவரை 2 ஆயிரம் மில்லிலீற்றர் கசிப்புடன் கைது செய்தனர்.

கைதான இளைஞரை ஜீப் வாகனத்தில் ஏற்றுவதற்குப் பொலிஸார் முற்பட்டபோது குறித்த இளைஞரின் சகோதரி உள்ளிட்ட உறவினர்கள் அடங்கிய குழுவினர் அவரை ஜீப் வாகனத்தில் ஏற்றவிடாது பொலிஸாரைத் தடுத்தனர்.

இதையடுத்துப் பொலிஸாருக்கும் அவர்களுக்கும் இடையே இழுபறி இடம்பெற்றுக் கொண்டிருந்தபோது குறித்த இளைஞர் அங்கிருந்து தப்பி ஓட முயற்சித்த நிலையில் அவரைப் பொலிஸார் சுற்றிவளைத்து மீண்டும் பிடித்தனர்.

கைதான இளைஞர் ஜீப் வாகனத்தில் ஏற்றப்பட்டதையடுத்து பொலிஸார் மீது இளைஞரின் உறவினர்கள் தாக்குதல் மேற்கொண்டதில் பொலிஸார் ஒருவர் காயமடைந்தமையுடன் ஜீப் வாகனத்தின் கண்ணாடிகளும் உடைந்து சேதமடைந்தன.

சம்பவத்தில் காயமடைந்த பொலிஸ் உத்தியோகத்தர் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார்.

அதேவேளை, பொலிஸாரின் கடமைக்கு இடையூறு விளைவித்தமை, பொலிஸாரின் ஜீப் வாகனத்தை உடைத்துச் சேதப்படுத்தியமை ஆகிய குற்றச்சாட்டுக்களின் கீழ் 6 பெண்கள் உட்பட 12 பேர் கைதுசெய்யப்பட்டனர்.

அவர்களை மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்றத்தில் பொலிஸார் ஆஜர்படுத்தியபோது எதிர்வரும் 22ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

இதேவேளை, கசிப்பு வியாபாரத்தில் ஈடுபட்ட இளைஞர் ஏற்கனவே கசிப்பு கடத்தல் மற்றும் வியாபாத்தில் ஈடுபட்ட இரு சம்பவங்களில் கைதுசெய்யப்பட்டு தண்டப்பணம் செலுத்தியுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

## வாக்களித்த 69 லட்சம் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

கையில் பணமில்லை. பணமிருந்தாலும் உணவில்லை. மின் வெட்டு, எரிபொருள் தட்டுப்பாடு, அரிசி, சீனி, காஸ் இல்லை. இருந்தாலும் அனைத்துக்கும் வரிசை என மரணதண்டனை கைதிகளைப் போன்று வாக்களித்த மக்கள் துன்பப்படுத்தப்படுகின்றனர்.

ராஜபக்ஷ குடும்பத்தினது மோசமான செயற்பாடுகளும் ஊழல், மோசடிகளுமே நாட்டுக்கும் நாட்டு மக்களுக்கும் இந்த நிலைமை ஏற்படக் காரணமாக அமைந்துள்ளன.

நாட்டின் நற்பெயருக்கு அபகீர்த்தி, மக்கள் துன்புறுத்தப்படுதல், தேசிய சொத்துக்களைப் பாதுகாக்கத் தவறியமை, தேசிய வருமானங்களை இல்லாமல் செய்தமை, ஊழல் - மோசடிகள் போன்ற குற்றச்சாட்டுகளுக்குக் காரணமாக இருந்த அல்லது அவற்றைத் தடுக்கத் தவறிய இவர்கள் யாரும் அதிகாரத்தில் இருப்பதற்கு எந்த அருகதையும் அற்றவர்கள்.

எனவே, இவர்களை வீட்டுக்கு அனுப்பும்வரை போராட்டம் தொடர வேண்டும். குற்றவாளிகளுக்கு உரிய தண்டணையை வழங்குவதன் மூலம் சட்டத்தின் ஆட்சி உறுதிப்படுத்தப்பட வேண்டும் - என்றுள்ளது.

## வீட்டுப் பணிப்பெண்களின் ..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
நாடுகளுக்கு 21 வயதுகளாகவும் உள்ளது.

தொழிலாளர் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சரால் முன்வைக்கப்பட்ட யோசனையின் அடிப்படையில் வயது எல்லையைத் திருத்துவது குறித்து அமைச்சரவைக்குப் பரிந்துரைகளை வழங்க நீதி, சிறைச்சாலைகள் மற்றும் அரசமைப்பு சீர்திருத்தங்கள் அமைச்சர் தலைமையில் அமைச்சரவை உபகுழுவொன்றை நியமிக்க கடந்த 6ஆம் திகதி இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

இதன்படி, குறித்த அமைச்சரவை உபகுழுவால் முன்வைக்கப்பட்ட பரிந்துரைகளைக் கருத்தில்கொண்டு இலங்கைப் பெண்களை வெளிநாடுகளில் வீட்டு மற்றும் வீட்டு வேலைகளில் சார்ந்த பணிகளில் ஈடுபடுத்துவதற்கான ஆகக் குறைந்த வயதெல்லை 21 வயதுகளாக திருத்துவதற்கு அமைச்சரவை தீர்மானித்துள்ளது.

## யாழ். மாநகர மேயருடன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
இந்தச் சந்திப்பு யாழ்ப்பாணம் மாநகர சபை அலுவலகத்தில் நடைபெற்றது.

இதன்போது அரசியல், பொருளாதாரம் மற்றும் அபிவிருத்தி விடயங்கள் தொடர்பில் பேசப்பட்டன.

## சு.க., ஜே.வி.பியும் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான அரசுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் ஐக்கிய மக்கள் சக்தி ஒரு வாரத்துக்கு அதாவது இந்த வாரம் முழுவதும் நாடாளுமன்ற அமர்வுகளைப் புறக்கணிக்கவுள்ளதாக அறிவித்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

இது தொடர்பில் கருத்து வெளியிட்ட ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார எம்.பி.,

நாடாளுமன்ற அமர்வுகளை இன்று முதல் புறக்கணிக்க ஐக்கிய மக்கள் சக்தியினராகிய நாம் தீர்மானித்துள்ளோம்.

நாங்கள் நாடாளுமன்றத்துக்கு வந்து நேரத்தை வீணடிக்க விரும்பவில்லை.

எதிர்வரும் நாள்கள் மற்றும் வாரங்கள் கடுமையானவையாக இருக்கும் என்ற அரசின் எச்சரிப்பைக் கேட்க நாங்கள் விரும்பவில்லை.

அரசமைப்பு சீர்திருத்தங்கள் குறித்து அரசு சரியான உத்தரவாதத்தை வழங்கவில்லை - என்றார்.

## பேலியகொடை ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
இந்தச் சம்பவத்தில் 42 வயதான குடும்பஸ்தரே பலியாகியுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சம்பவ இடத்துக்கு விரைந்த பேலியகொடைப் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

## அரச அடிமைகளே ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
உங்களால் வீதியில் நடமாட முடியுமா? மக்கள் முன் செல்ல முடியுமா? நாம் செல்வோம். மக்களோடு மக்களாக நாம் நிற்கின்றோம் என்றும் அரச தரப்பினரைப் பார்த்து அவர் கூறினார்.

அவர் மேலும் உரையாற்றுகையில்,

நாடாளுமன்றத்தால் மக்களுக்கு என்ன செய்ய முடியும்? உங்களால் எரிபொருள், எரிவாயு, அரிசி கொடுக்க முடியுமா? உங்களுக்கு வெட்கம் இல்லையா? கொள்ளையடித்துக்கொண்டு மாறி மாறி ஆட்சி செய்கின்றீர்கள். புதிய பிரதமர் வந்த பின்னர்தான் வரிசையுகம் மேலும் அதிகரித்துள்ளது. நீங்கள் 220 லட்சம் மக்களைக் கொலை செய்யப் போகின்றீர்கள்.

இந்த நாட்டில் துன்பப்படும் மக்களின் அபிலாஷைகளை நிறைவேற்றவோ அல்லது இந்த நாட்டின் பாரதூரமான பொருளாதார வீழ்ச்சியைத் தடுக்கவோ அல்லது இந்த நாட்டைக் கட்டியெழுப்பவோ எந்தத் திட்டமும் இல்லாத அரசைக் கொண்ட இந்த நாடாளுமன்றத்தின் அமர்வுகளை ஒரு வாரத்துக்கு அதாவது இந்த வாரம் முழுவதும் புறக்கணிக்கத் தீர்மானித்துள்ளோம்.

வரிசையில் நிற்கும் மக்கள் படும் துன்பங்களைப் புரிந்துகொள்ளாத, பால்மா இன்றி தவிக்கும் தாய்மார்கள் மற்றும் குழந்தைகளின் துயரங்களைப் புரிந்து கொள்ளாத, திருடுவதற்கும் சுரண்டுவதற்கும் கை தூக்கும் இந்த நாடாளுமன்றம் வெறும் கதையாடல் கடை மாத்திரமே - என்றார்.

## முல்லையில் 715 லீற்றர் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
மண்ணெண்ணெய் பீப்பாய்கள் கண்டுபிடிக்கப்பட்டன.

இந்த விடயம் தொடர்பில், பொலிஸாரூடாக முல்லைத்தீவு மாவட்ட நீதிவான் ரி. சரவணராஜாவின் கவனத்துக்குக் கொண்டு செல்லப்பட்டது.

இதனை ஆராய்ந்த நீதிவான், அந்தப் பகுதியில் தோண்டுதல் பணிகளை முன்னெடுக்குமாறு உத்தரவிட்டார்.

இதையடுத்து அதிகாரிகள், கிராம சேவையாளர் முன்னிலையில் நேற்று குறித்த மண்ணெண்ணெய் பீப்பாய்கள் தோண்டி எடுக்கப்பட்டன.

மேற்படி 7 பீப்பாய்களில் இருந்து 715 லீற்றர் மண்ணெண்ணெய் மீட்கப்பட்டன.

மீட்கப்பட்ட பொருள்கள் அனைத்தும் இன்று முல்லைத்தீவு மாவட்ட நீதிவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது எனப் புதுக்குடியிருப்புப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

## இந்தியத் துணைத் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
நிலையத்தில் நடைபெற்றது.

இதில் யாழ். இந்தியத் துணைத் தூதுவர் ராகேஷ் நடராஜ், வடக்கு மாகாண சபையின் அவைத் தலைவர் சி.வி.கே. சிவஞானம், யாழ். மாநகர சபை மேயர் வி.மணிவண்ணன், மாநகர ஆணையாளர் தி.ஜெயசீலன் மற்றும் யாழ்ப்பாணம் கல்வி வலயத்துக்குட்பட்ட பாடசாலை அதிபர்கள், பாடசாலை மாணவர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

மங்கள விளக்கேற்றலோடு யாழ். இந்தியத் துணைத்தூதுவரின் வரவேற்புரையுடன் நடைபெற்ற இந்த நிகழ்வில் யோகா பயிற்சியும் இடம்பெற்றது.

நிகழ்வின் இறுதியில் இன்றைய யோகாப் பயிற்சியில் கலந்துகொண்டோருக்குச் சான்றிதழ்கள் வழங்கிவைக்கப்பட்டன.





விளம்பரத் தொடர்புகளுக்கு -
தொலைபேசி இலக்கம்-
076 443 8622



# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## நியாயமான பகிஷ்கரிப்பு

நாடாளுமன்ற அமர்வுகளை ஒரு வாரத்துக்குப் புறக்கணிக்க முக்கிய எதிர்க்கட்சிகள் தீர்மானித்துள்ளன. பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி, மக்கள் விடுதலை முன்னணி, முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையிலான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி ஆகியன இந்த தீர்மானத்தை அறிவித்துள்ளன.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முடிவு இன்று மதியம் வரை உத்தியோகபூர்வமாக வெளியாகவில்லை. கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் வயது மூப்புக் காரணமாக இன்று நாடாளுமன்றுக்கு வருகை தரவில்லை. கூட்டமைப்பின் பேச்சாளர் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ. சுமந்திரன் தம்மிக பெரேரா எம்.பியாக நியமிக்கப்பட்டமைக்கு எதிராக உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள அடிப்படை உரிமை மீறல் மனு மீதான வழக்கில் முன்னிலையாகி வாதாடி கொண்டிருந்தமையால் அவரும் இவ்விடயம் தொடர்பில் கூட்டமைப்பின் நிலைப்பாட்டை வெளிப்படுத்தக்கூடிய நிலையில் இன்று முற்பகல் இருக்கவில்லை. பெரும்பாலும் பிரதான எதிர்க்கட்சிகளுடன் சேர்ந்து ஒத்த முடிவை கூட்டமைப்பும் எடுக்கக் கூடும் என எதிர்பார்க்கலாம்.

நாடாளுமன்றத்தைப் பகிஷ்கரிப்பதன் மூலம் காட்டமாக எதிர்ப்பைக் காட்ட வேண்டிய கட்டாயம் – ஒரு நியாயம் – பிரதான எதிர்க்கட்சிகளுக்கு ஏற்பட்டுள்ளது என்பது உண்மைதான்.

எரிபொருள் நிலைமை வரவர மோசமாகி வருகின்றது. மிக சொற்பமாக – மட்டுப்படுத்தப்பட்ட அளவில் – தேவைக்கு மிகக் குறைந்த – அளவில் எரிபொருள் விநியோகிக்கப்படுவதால் அதற்காக – அதைப் பெற்றுக் கொள்வதற்காக – மக்கள் நாள் கணக்கில், மழை – வெயிலில் – இரவு – பகல் – பாராமல் வாகனங்களுடன் முண்டியடித்து காத்துக் கிடக்கும் அவலம் நீடிக்கிறது. பல எரிபொருள் நிலையங்களில் மோதல்கள், முரண்பாடுகள், களேபரங்கள் வெடித்துள்ளன.

மக்களின் வெறுப்புணர்ச்சி, சீற்றம், கோபம், ஆதங்கம் எல்லை மீறும் நிலைமை ஏற்பட்டு வருகிறது. அது ஒன்றுபட்ட சீற்றமாக எழுமானால் 'சாது மிரண்டால் காடு கொள்ளாது' என்ற நிலைமையாகிவிடும்.

நாடு இத்தகைய படுமோசமான நிலைக்குச் சென்று கொண்டிருக்கையில், ஜனாதிபதியும் பிரதமரும் அமைச்சர்களும் அந்த நெருக்கடிகளுக்குத் தீர்வு காண இயலாமல் – வக்கற்றவர்களாக – கையறு நிலையில் இருக்கின்றனர். ஆளும் தரப்பு எம்.பிக்களின் நிலைமையும் அதுதான்.

மக்களின் எதிர்ப்புணர்வை உரிய மட்டத்தில் பிரதிபலிக்க வேண்டிய கட்டாயம் எதிரணிக்கு உண்டு.

இந்த ஜனாதிபதியினால், இந்தப் பிரதமரால், இந்த அமைச்சரவையால், இந்த அரசால், இந்த நாடாளுமன்றத்தால் மக்களின் இப்போதைய மோசமான நெருக்கடிக்கு எந்தத் தீர்வும் தரமுடியாது என்பதை வெளிப்படுத்தி அம்பலப்படுத்திக் காட்ட வேண்டிய கட்டாயம் எதிர்க்கட்சிகளுக்கு வந்துள்ளது.

தோற்றுவிட்ட ஜனாதிபதி, தோற்றுப்போன பிரதமர், பயனற்ற அமைச்சரவை, உருப்படியற்ற அரசு, யோக்கியமற்ற ஆளும் தரப்பு, அர்த்தமற்ற நாடாளுமன்றம் என்று எல்லாத் தரப்புகளுமே பிரயோசனமேயற்றனவாகி விட்டன.

தமது பதவி சுகத்துக்காக, அதிகார வெறிக்காக, பிரதமரும் ஜனாதிபதியும் பண்ணும் அடாவடித்தனங்கள் நாட்டை இன்னும் மோசமான நிலைக்குள் கொண்டு போய்த் தள்ளப் போகின்றன.

ஜனாதிபதி, அரசு, நாடாளுமன்றம் என முத்தரப்புகளுமே மக்கள் தந்த ஆணையை இழந்து விட்டமையால் அது தொடர்பாகத் தங்கள் எதிர்ப்பை இந்த நாடாளுமன்ற பகிஷ்கரிப்பு வடிவத்திலேயே வெளிப்படுத்திக் காட்ட எதிரணிக் கட்சிகள் எடுத்திருக்கும் நடவடிக்கை சரியானதுதான். அதன் தாற்பரியம் – அந்த முடிவில் புதைந்துள்ள நீதி, நியாயம் ஆளும் தரப்புக்கு புரியுமோ என்னவோ...!

# யாழ்.போதனா வைத்தியசாலைக்கு சிவபூமி ஒழுங்கமைப்பில் நிதி உதவி!



யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் மகப்பேற்று, கருவளத் துறைப் பிரிவுக்கு அவசர மருந்துத் தேவைகளுக்காகப் புலம்பெயர்ந்து ஆஸ்திரேலியா சிட்னியில் வசிக்கும் கணக்காளாரான யாழ்.ஏழாலையைச் சேர்ந்த மகிந்தன் மகாதேவா சிவபூமி அறக்கட்டளை ஊடாகப் பன்னிரண்டு லட்சம் ரூபாநிதிஉதவிவழங்கியுள்ளார்.

நேற்று திங்கட்கிழமை முற்பகல் 11 மணியளவில் யாழ். கோண்டாவிலில்அமைந்துள்ள சிவபூமி அறக்கட்டளையின் தலைமையகத்தில் வைத்து பெண் நோயியல் மகப்பேற்று மருத்துவ நிபுணர் நமசிவாயம் சரவணபவாவிடம்சிவபூமிஅறக்கட்டளையின் தலைவரும், பிரபல சைவத்தமிழ்ச் சொற்பொழிவாளருமான செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு. திருமுருகன் மேற்படி நிதி உதவியை நேரடியாகக் கையளித்தார்.

இதேவேளை, சிவபூமி அறக்கட்டளை தற்போதைய நெருக்கடி நிலையைக் கருத்திற் கொண்டு யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கும், தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலைக்கும் நோயாளர்களின் மருத்துவத் தேவைகளுக்காகத் தொடர்ச்சியாகப் பல்வேறு உதவிகளை வழங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# கனடா தமிழரசுக் கட்சித் தலைவரால் மாற்றுத் திறனாளி குடும்பத்துக்கு உதவி

கனடா தமிழரசுக் கட்சித் தலைவர்சோமசச்சிதானந்தனின் நிதிப் பங்களிப்புடன் யாழ் மாவட்டத்தில் மாற்றுத்திறனாளிப் பெண் தலைமைத்துவத்துடன் வறுமைநிலையில் உள்ள குடும்பத்தினருக்கு 'உள்ளத்தில் இருந்துஒருதுளி'எனும் தொனிப் பொருளில் உலருணவு வழங்கப்பட்டது.

சமூகசேவையாளர் கலாநிதி அகிலன் முத்துக்குமாரசாமி ஊடாக இந்த உலருணவுப் பொதி மேற்படி குடும்பத்துக்கு வழங்கப்பட்டது.



# முத்துராஜவெல பிரதேசத்தில் உள்ள காணியை மின்சாரசபைக்கு வழங்க அமைச்சரவை அனுமதி!

முத்துராஜவெல பிரதேசத்தில் உள்ள காணியொன்றைஇலங்கைமின்சார சபைக்கு வழங்குவதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

இதன்படி, முத்துராஜவெல யுகதனவி மின் நிலையத்தை அண்மித்த 10 ஏக்கர் நிலத்தில் 300 மெகாவாட் திறன் கொண்ட எல்.என்.ஜி. மின் உற்பத்தி நிலையத்தை அமைக்கஉத்தேசிக்கப்பட்டுள்ளது.

இதற்கு இலங்கை காணி அபிவிருத்திக் கூட்டுத்தாபனத்தின் பணிப்பாளர் சபையால்அங்கீகாரம்வழங்கப்பட்டுள்ளதுடன், குறித்த காணியைக் கொள்வனவு செய்வதற்கு இலங்கை மின்சார சபையின் பணிப்பாளர் சபையும் அனுமதி வழங்கியுள்ளது.

# குடும்பத் தகராறில் இளைஞர் கொலை

திருகோணமலை புல்மோட்டை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் குடும்பத் தகராறு காரணமாக ஏற்பட்ட கைகலப்பில் நபரொருவர் உயிரிழந்துள்ளார்.





இவ்வாறு உயிரிழந்தவர் புல்மோட்டை– அரபாத் நகர் பகுதியைச் சேர்ந்த ஏ.ஜீ.சதாம் (28வயது) என புல்மோட்டை பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்றிரவு இந்தக் குடும்பத் தகராறு ஏற்பட்டுள்ளது. மேற்படி இளைஞரின் மனைவியின் சகோதரர் தாக்கியதிலேயே அவர் உயிரிழந்தார் எனத் தெரியவருகின்றது.


இருவருக்கிடையில்ஏற்பட்டகைகலப்பில் படுகாயமடைந்தவர் புல்மோட்டை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டமையையடுத்து மேலதிக சிகிச்சைக்காக திருகோணமலை பொது வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டு சிகிச்சையளிக்கப்பட்ட நிலையில் சிகிச்சை பலனின்றி இன்று காலை உயிரிழந்துள்ளார் என வைத்தியசாலைப் பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்தவரின் சடலம் தற்போது திருகோணமலை பொது வைத்தியசாலை பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது. மேலதிக விசாரணைகளை புல்மோட்டை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# 46 ஆண்டுகள் பழைமையான ஜம்போ கப்பல் உணவகம் கடலில் மூழ்கியது

## கப்பலில் தண்ணீர் புகுந்ததால் விபத்து நேர்ந்ததாக விளக்கம்





ஹொங்கொங்கில் புகழ்பெற்ற ஜம்போ கப்பல் உணவகம் கடலில் மூழ்கியது. ஜம்போ கப்பல் உணவகம் ஹொங்கொங்கில் அடையாளங்களின் ஒன்றாக திகழ்ந்தது. 1976ம் ஆண்டில் சேவையை தொடங்கிய இந்த கப்பல் பார்ப்பதற்கு அரண்மனை தோற்றம் கொண்டது. பிரிட்டிஷ் ராணி எலிசபத் முதல் ஹாலிவுட் நடிகர் டாம் குரூஸ் வரை பல பிரபலங்கள் இந்த கப்பல் உணவகத்திற்கு வருகை புரிந்துள்ளனர்.

ஆனால் கொரோனாவால் 2 ஆண்டுகளுக்கு முன்பு இந்த கப்பல் உணவகத்தின் சேவை நிறுத்தப்பட்டது. இதன் பெரும் சுமை ஏற்பட்டதால் முழுவதுமாக நிறுத்தி விட்டதாக உரிமையாளர்கள் முடிவு செய்தனர்.

இந்த நிலையில் தென் சீனக் கடலில் உள்ளஷீஷாதீவில்சென்றுகொண்டிருந்த போது கப்பல் நீரில் மூழ்கிவிட்டதாக அதன் முதன்மை நிறுவனம் தெரிவித்துள்ளது.

தண்ணீர் உள்ளே நுழைய தொடங்கியவுடன் கப்பலை மீட்க முயற்சித்தும் மீட்கமுடியவில்லை என்றும் அந்நிறுவனம் கவலை தெரிவித்துள்ளது. கப்பல் மூழ்க தொடங்கியவுடன் உள்ளே இருந்த அனைவரும் பத்திரமாக மீட்கப்பட்டனர் எனவும் அந்நிறுவனம் தெரிவித்துள்ளது.

## 36 மணி நேரத்தில் 3 ராக்கெட்டுகள் ஸ்பேஸ்எக்ஸ் அசத்தல்



உலக கோடீஸ்வரர்களில் ஒருவரான எலான் மஸ்க்கின் ஸ்பேஸ் எக்ஸ் நிறுவனம் விண்வெளி தொடர்பான பல ஆராய்ச்சிகளில் ஈடுபட்டு வருகிறது. அந்த வகையில் தற்போது அந்த நிறுவனம் 36 மணி நேரத்தில் 3 ராக்கெட்களை விண்ணில் ஏவி புதிய சாதனை படைத்துள்ளது. இதற்கு முன்பு ஜனவரி மாதமும் ஸ்பேஸ் எக்ஸ் நிறுவனம் தொடர்ச்சியாக 3 ராக்கெட்டுகளை விண்ணில் ஏவி சாதனை படைத்து இருந்தது. தொலைத்தொடர்பை மேம்படுத்துவதற்காக புளோரிடா மாகாணத்தில் உள்ள கேப் கனவெரல் விண்வெளி நிலையத்தில் இருந்து நேற்று தொலைத்தொடர்பு செயற்கைக் கோளுடன் 'பால்கன் 9' விண்கலம் வெற்றிகரமாக விண்ணில் பாய்ந்தது. புறப்பட்ட 10 நிமிடங்களுக்குப் பிறகு, ராக்கெட்டின் முதல் நிலை ஸ்பேஸ்எக்ஸ் ட்ரோன் ஷிப்பில் செங்குத்தாக தரையிறங்கியது. ராக்கெட்டில் இருந்து பிரிந்து பயணித்த செயற்கைக் கோள், திட்டமிட்டபடிஒருமணி50நிமிடங்களில் சுற்றுப் பாதையில் நிலைநிறுத்தப்பட்டதாக ஸ்பேஸ்எக்ஸ் தெரிவித்துள்ளது.

# ரஷ்யா சண்டையை மேலும் தீவிரப்படுத்துகிறது அதற்காக நாங்கள் தயாராகி வருகின்றோம்

## உக்ரைன் அதிபர் ஜெலன்ஸ்கி எச்சரிக்கை



ரஷ்யா சண்டையை மேலும் தீவிரப்படுத்த உள்ளதாக உக்ரைன் அதிபர் வோலோ டிமிர் ஜெலன்ஸ்கி எச்சரிக்கை விடுத்துள்ளார். ரஷ்யா சண்டையை மேலும் தீவிரப்படுத்த உள்ளதாக உக்ரைன் அதிபர் வோலோ டிமிர் ஜெலன்ஸ்கி எச்சரிக்கை விடுத்துள்ளார். ரஷ்யா உக்ரைன் போர் தடையின்றி தொடர்ந்து 117வது நாளாக நீடிக்கிறது.உக்ரைனின் தொழில்துறை டான்பாஸ் பகுதியைக் கைப்பற்ற ரஷ்யா முயற்சித்து வருகிறது. இதனால் உக்ரைனின் கிழக்குப் பகுதிகள், கடந்த பல வாரங்களாக கடுமையான போர் தாக்குதல்களால் உலுக்கப்பட்டுள்ளன.

இந்நிலையில், உக்ரைன் தலைநகர் கீவில் நேற்று செய்தியாளர்களை சந்தித்த அவர் கூறியதாவது,

'இந்த வாரம் ரஷ்யா போர் நடவடிக்கைகளை தீவிரப்படுத்தும் என்று நாங்கள் வெளிப்படையாக எதிர்பார்க்கிறோம். அதற்காக நாங்கள் தயாராகி வருகிறோம். கிழக்குப்பகுதியில்ரஷ்யப்படைகளின் புதிய தாக்குதல்களை உக்ரைன் முறியடித்தது. நாங்கள் தெற்கு உக்ரைன் பகுதியை யாருக்கும் விட்டுக்கொடுக்க மாட்டோம், எங்களுடையது அனைத்தையும் திருப்பி பெறுவோம், கருங்கடல் உக்ரேனியர்களுடையதாகவும் பாதுகாப்பாகவும் மாறும். நம் ராணுவம் காத்துக்கொண்டிருக்கிறது.

ஐரோப்பியயூனியனில் உறுப்பினராக சேருவதற்கான வரலாற்று சிறப்புமிக்க முடிவுக்காக உக்ரைன் காத்திருக்கிறது. அவர்களிடமிருந்து இந்த வார இறுதிக்குள் ஒரு நம்பிக்கையான முடிவை எதிர்பார்க்கிறோம். உக்ரைனுக்கு இதுபோன்ற சில விதிவிலக்கான முடிவுகள் அமைந்து இருக்கின்றன என' ஜெலென்ஸ்கி கூறினார். நேட்டோவின் தலைவர் ஜென்ஸ் ஸ்டோல்டன்பெர்க் கூறுகையில், உக்ரைன் மீதான ரஷ்யாவின் போர் சில ஆண்டுகளுக்கு நீடிக்கும் என்று எச்சரித்ததுடன், நீண்ட கால இராணுவ, அரசியல் மற்றும் பொருளாதார உதவிகளை வழங்க மேற்கு நாடுகள் தயாராக இருக்குமாறு வலியுறுத்தினார்.

## இங்கிலாந்து பிரதமருக்கு அறுவை சிகிச்சை



இங்கிலாந்து பிரதமர் போரிஸ் ஜான்சனுக்கு லண்டன் மருத்துவமனையில் சைனஸ் அறுவை சிகிச்சை செய்யப்பட்டுள்ளது. இங்கிலாந்து பிரதமரான போரிஸ் ஜான்சன் சைனஸ் தொந்தரவு காரணமாக அடிக்கடி அவதிப்பட்டு வந்தார். இதனால், அவருக்கு லண்டனில் உள்ள நஷனல் ஹெல்த் சர்வீஸ் அரசு மருத்துவமனையில் சைனஸ் அறுவை சிகிச்சை நேற்று நடந்தது. அப்போது மருத்துவமனையில் அவருடன் துணைப் பிரதமர் டொமினிக் ராப் உடன் இருந்தார்.

இது குறித்து பிரதமரின் செய்தி தொடர்பாளர் மேக்ஸ் பிளெய்ன் கூறுகையில், "முன் கூட்டி திட்டமிட்டபடியே அறுவை சிகிச்சை நடந்தது. வழக்கமான மருத்துவமனை நடைமுறைகளுக்கு பிறகு, இல்லம் திரும்பிய பிரதமர் ஓய்வில் உள்ளார்," என்று தெரிவித்தார்.

# முன்கூட்டியே தேர்தலை நடத்தாவிட்டால் பொருளாதார நெருக்கடி மோசமடையும்

## இம்ரான்கான் ஆருடம்

அந்நியச் செலாவணி கையிருப்பு குறைவு, அதிக அளவு பணவீக்கம் உள்ளிட்ட பொருளாதார சவால்களை பாகிஸ்தான் எதிர்கொண்டுள்ளது. இதற்கிடையே, பாகிஸ்தானில் புதிய அரசு பதவிக்கு வந்த பிறகு 3வது முறையாக பெற்றோல் விலையை உயர்த்தியது. அங்கு நிலவி வரும் பணவீக்கத்திற்கு எதிராக முக்கிய நகரங்களில் இம்ரான்கான் ஆதரவாளர்கள் போராட்டம் நடத்தி வருகின்றனர். இந்நிலையில், முன்னாள் பிரதமர் இம்ரான்கான் போராட்டக்காரர்களோடு காணொலி மூலம் உரையாடினார். அப்போது அவர் பேசியதாவது: நான் உங்களுக்கு போராட்டத்தில் ஈடுபட அழைப்பு விடுக்கிறேன். சுதந்திரமான மற்றும் வெளிப்படையான தேர்தல் நடத்தப்படாவிட்டால் மேலும் குழப்பம் பரவும். முன்கூட்டியே தேர்தல் நடத்தப்படாவிட்டால் நாட்டின் பொருளாதார மற்றும்அரசியல்நிலைமை மேலும் மோசமடையும். தற்போது உள்ள அரசானது பொருளாதாரத்தைக் கையாளும் திறனற்றது. வரும் நாள்களில் விலைகள் அதிகமாக உயரும் என குறிப்பிட்டார்.






## லெபனானிலும் குரங்கு அம்மை நோய் பாதிப்பு கண்டுபிடிப்பு

ஆபிரிக்கா நாடுகளில் காணப்படும் குரங்கு அம்மை நோய் தற்போது பல உலக நாடுகளில் பரவி வருகிறது. இதன் காரணமாக பல நாடுகளில் தீவிர கண்காணிப்பு மற்றும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இங்கிலாந்து, ஸ்பெயின், போர்த்துக்கல், கனடா, அமெரிக்கா உள்ளிட்ட 20க்கு மேற்பட்ட நாடுகளில் குரங்கு அம்மை பாதித்துள்ளது என உலக சுகாதார அமைப்பு அறிவித்திருந்தது.

இந்நிலையில், லெபனான் நாட்டில் முதல் முறையாக ஒருவருக்கு குரங்கு அம்மை நோய் பாதிப்பு இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது என அந்நாட்டு சுகாதார அமைச்சகம் தெரிவித்துள்ளது. வெளிநாட்டில் இருந்து திரும்பிய நபருக்கு குரங்கு அம்மை நோய் பாதிப்பு கண்டறியப்பட்டதும், அவர் தனிமையில்சிகிச்சைபெற்றுவருகிறார்எனதெரிவிக்கப்பட்டுள்ளது.

# ஹிட்லருக்கு எப்படி மரணம் நேர்ந்ததோ அப்படித்தான் மோடிக்குமாம்

## காங்கிரஸ் தலைவர் சர்ச்சைப் பேச்சு



ஹிட்லருக்கு எப்படி மரணம் நேர்ந்ததோ அப்படித்தான் பிரதமர் மோடிக்கு நேரும் என்று மூத்த காங்கிரஸ் தலைவர் சுபோத்காந்த் சஹாய் பேசியிருக்கின்றமை பெரும் சர்ச்சையாக வெடித்துள்ளது.

டெல்லி ஜந்தர் மந்தரில் இந்திய மத்திய அரசின் அக்னிபாத் திட்டத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து காங்கிரஸ் தலைவர்கள் சத்தியாகிரகப் போராட்டம் நடத்தினர்.

இந்தப் போராட்டத்தில் பேசிய காங்கிரஸ் முன்னாள் மத்திய அமைச்சர் சுபோத் காந்த் சஹாய், பிரதமர் நரேந்திர மோடியை கடுமையாக விமர்சித்தார்.

ஹிட்லரைப் போல நடந்து கொள்பவர்கள் அவரைப்போல் தான் இறப்பார்கள். பிரதமர் மோடியும் ஹிட்லரைப் போலதான் இறப்பார், என்று சுபோத் காந்த் சஹாய் தெரிவித்திருந்தார்.

அவரின் இந்தக் கருத்துக்கு பா.ஜ.க. கடும் கண்டனம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக பா.ஜ.க. செய்தித் தொடர்பாளர் சுதன்ஷு திரிவேதி கூறுகையில், காங்கிரஸ் முன்னாள் அமைச்சர் பிரதமரை அவமதித்திருக்கிறார். இது போன்ற வார்த்தைகளை காங்கிரஸ் பயன்படுத்துவது முதல்முறை அல்ல. 80க்கும் மேற்பட்ட நிகழ்வுகள் உள்ளன. நரேந்திர மோடியை துண்டுதுண்டாக வெட்டுவேன் என்று கூறிய இம்ரான் மசூத்துக்கு ஆதரவாக ராகுல் காந்தி தேர்தல் பிரச்சாரம் செய்தார். காங்கிரஸ் தலைவர்கள் பிரதமர் மோடிக்கு எதிராக கேவலமான வார்த்தைப் பிரயோகங்களை செய்து வருகின்றனர்.

அனைவருக்கும் ஒன்றைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். பிரதமர் மோடி குஜராத் முதல்வராக இருந்தபோது நடந்த சட்டமன்றத் தேர்தலில் காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தி பிரதமர் மோடியை கொலை வியாபாரி என்று விமர்சனம் செய்தார். இந்த வார்த்தையால் குஜராத் மக்கள் மிகவும் காயப்பட்டனர். அதனால்தான் பிரதமர் தேர்தலில் வரலாறு காணாத வெற்றியை அவருக்கு அளித்தனர்.

மக்கள் மோடி மீது அன்பு வைத்திருப்பதால்தான் தொடர்ச்சியாக அவரை வெற்றி பெறச்செய்து வருகின்றனர். இதனால் காங்கிரஸ் விரக்தி அடைந்திருக்கிறது, என்று தெரிவித்திருக்கிறார்.



## அக்னிபாத் எதிர்ப்புப் போராட்டத்தால் 612 ரயில்கள் ரத்தாகின என அறிவிப்பு

இராணுவம் உள்ளிட்ட முப்படைகளில் இந்திய இளைஞர்களை சேர்க்கும் அக்னிபாத் என்ற புதிய திட்டத்துக்கு எதிர்ப்பு தெரிவித்து வட மாநிலங்களில் இளைஞர்கள் பலர் போராட்டத்தில் குதித்தனர்.

இந்தப் போராட்டங்களின்போது, பீகார், உத்தரப் பிரதேசம், டெல்லி, அரியானா, ஒடிசா, பஞ்சாப் மற்றும் தெலுங்கானா உள்ளிட்ட மாநிலங்களில் வன்முறை வெடித்தது. இதில், பல ரயில்கள் தீ வைத்து கொளுத்தப்பட்டன. ரயில் நிலையங்கள் சூறையாடப்பட்டன.

இந்த நிலையில் இந்திய ரயில்வே திணைக்களம் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில், அக்னிபாத் திட்டத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்து நடைபெற்று வரும் போராட்டங்களை முன்னிட்டு 223 எக்ஸ்பிரஸ் ரயில்கள் மற்றும் 379 பயணிகள் ரயில்கள் உள்ளடங்கலாக மொத்தம் 612 ரயில்கள் நேற்று ஒரு நாளில் ரத்துச் செய்யப்பட்டுள்ளதாகவும் அவை தவிர, 4 எக்ஸ்பிரஸ் ரயில்கள் மற்றும் 6 பயணிகள் ரயில்கள் பகுதியளவாக ரத்துச் செய்யப்படுகின்றன எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## அக்னிபாத் மூலம் தங்களுக்கென ஆயுதக்குழுவை உருவாக்க பா.ஜ.க. முயல்வதாக மம்தா பானர்ஜி குற்றச்சாட்டு

முப்படைகளில் இளைஞர்களை சேர்க்கும் அக்னிபாத் என்ற திட்டத்திற்கு இந்திய மத்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளது. இந்ததிட்டத்தில்தேர்வாகும் இளைஞர்கள் அக்னி வீரர்கள் என அழைக்கப்படுவர். இந்த திட்டத்தில் சேரும் வயது வரம்பு 17 முதல் 23 வரையாகும். அக்னிபாத் திட்டத்தில் தேர்ந்தெடுக்கப்படும் அக்னி வீரர்களின் பணிக்காலம் 4 ஆண்டுகளாகும்.

4 ஆண்டுகளுக்கு பின் பணியில் இருந்து ஓய்வு பெறுவோருக்கு ஓய்வூதியம் எதுவும் வழங்கப்படாது. அதேவேளை, வீரர்களின் பணிக்காலத்தின் போது அவர்களுக்கான ஊதியமாக மொத்தம் 5 லட்ச ரூபா கிடைக்கும். ஓய்வுக்கு பின் 10 லட்ச ரூபா வழங்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனிடையே, இந்தத் திட்டத்திற்கு வட மாநிலங்களில் எதிர்ப்பு கிளம்பியுள்ளது. திட்டத்திற்கு எதிராக போராட்டங்கள் நடைபெற்று வருகின்றன.



போராட்டங்கள் பல இடங்களில் வன்முறையாக மாறி ரயில்களுக்கு தீ வைக்கப்படும் சம்பவங்களும் அரங்கேறியுள்ளன.

இந்த நிலையில், மேற்குவங்காள சட்டசபையில் அம்மாநில முதலமைச்சரும், திரிணாமுல் காங்கிரஸ் தலைவருமான மம்தா பானர்ஜி, அக்னிபாத் திட்டம் மூலம் தங்களுக்கென ஆயுதக்குழுவை உருவாக்க பா.ஜ.க. முயற்சிக்கிறது. அக்னிபாத்திட்டத்தின்கீழ்பணியாற்றும் வீரர்கள் 4 ஆண்டுகளுக்கு பின் என்ன செய்வார்கள்? இளைஞர்களின் கைகளில் ஆயுதங்களை கொடுக்க பா.ஜ.க. நினைக்கிறது.

ஆண்டுக்கு 2 கோடி வேலை வாய்ப்பு உருவாக்கப்படும் என பா.ஜ.க. வாக்குறுதியளித்தது. ஆனால், தற்போது பல்வேறு திட்டங்களின் பெயரில் பா.ஜ.க. நாட்டு மக்களை ஏமாற்றுகிறது என்று சாடியிருக்கிறார்.

## கேரளாவில் இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு மீண்டும் பாரம்பரிய சுண்டன் படகுப் போட்டி

கேரளாவில் ஓடும் ஆறுகளில் படகுப் போட்டி நடைபெறுவது வழக்கம். பல்வேறு அமைப்புகள் சார்பில் படகுப் போட்டி நடத்தப்பட்டாலும், குட்டநாட்டில் நடைபெறும் செம்பக்குளப் படகு போட்டியே மிகவும் பிரசித்தி பெற்றதாகும். இதில் 140 அடி நீள பாம்பு வடிவிலான சுண்டன் படகுகள் பங்கேற்கும். ஒவ்வொரு படகிலும் துடுப்புப் போட நூற்றுக்கும் மேற்பட்ட வீரர்கள் இருப்பார்கள்.

இந்தப் போட்டிக்காக வீரர்கள் பல மாதங்கள் பயிற்சி எடுப்பார்கள். படகை இயக்கும் வீரர்களை உற்சாகப்படுத்த வஞ்சிப் பாட்டும் பாடப்படும். இதனைக் கேட்கவும், போட்டியை ரசிக்கவும் கேரளா மட்டுமன்றி வெளிமாநிலங்கள் மற்றும் வெளிநாடுகளில் இருந்தும் சுற்றுலாப் பயணிகள் வருவது வழமை.

இந்தப் படகு போட்டி பல சினிமாப் படங்களிலும் காட்சிப்படுத்தப்பட்டுள்ளதனால் இந்த போட்டியை காண கேரளாவில் கூட்டம் அலைமோதும். கடந்த 2 ஆண்டுகளாக கொரோனாப் பிரச்சினை காரணமாக இந்தப் போட்டி நடைபெறவில்லை. தற்போது கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டுள்ளதால் கேரள மக்களின் பாரம்பரிய சுண்டன் படகுப் போட்டியை நடத்த அரசு அனுமதி வழங்கியுள்ளது. இதையடுத்து போட்டி அமைப்பாளர்கள் அதற்கானநடவடிக்கைகளைதொடங்கியுள்ளனர்.

வருகிற ஜூலை 12 ஆம் திகதி போட்டி நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த முறை போட்டியில் 9 படகுகள் பங்கேற்கவுள்ளன என தகவல்கள் தெரிவிக்கின்றன. போட்டியை உற்சாகத்துடன் நடத்த அனைத்து ஏற்பாடுகளையும் செய்து வருகிறோம் என போட்டி ஏற்பாட்டுக் குழுவினர் தெரிவித்துள்ளனர்.





## அரசின் அக்னிபாத் திட்டத்திற்கு எதிராக உச்ச நீதிமன்றத்தில் பொதுநல வழக்கு

இராணுவத்துக்கு ஒப்பந்த அடிப்படையில் ஆள் சேர்க்கும் அக்னிபாத் திட்டத்திற்கு எதிராக உச்ச நீதிமன்றத்தில் வழக்கறிஞர் எம்.எல்.ஷர்மா என்பவர் பொதுநல மனு ஒன்றைத் தாக்கல் செய்துள்ளார்.

அவர் தனது மனுவில், அக்னிபாத் திட்டம் சட்டவிரோதமானது, இந்திய அரசியலமைப்பிற்கு எதிரானது என்றும், இந்தத் திட்டம் தொடர்பாக பாதுகாப்பு அமைச்சகம் ஜூன் 14 ஆம் திகதி வெளியிட்ட அறிவிப்பை ரத்துச் செய்ய வேண்டும் என்றும் தெரிவித்துள்ளார்.

ஆயுதப்படைகளுக்கு நிரந்தர பணியமர்த்தல் மூலம் தேர்ந்தெடுக்கப்படும் ஓர் அதிகாரி, 60 வயது வரை நாட்டிற்காக பணியாற்ற முடியும்.

இப்போது கொண்டுவரப்பட்டுள்ள குறுகியகால பணியமர்த்தல் திட்டத்தில் ஒருவர் இராணுவத்தில் சேர்ந்து 10 முதல் 14 ஆண்டுகள் வரை அதிகாரியாக பணியாற்றுவதற்கான விருப்பத்தேர்வு உள்ளது. எனினும், அக்னிபாத் திட்டத்தின் மூலம் நியமிக்கப்பட்ட அக்னி வீரர்களில் 25 சதவீதத்தினர் மட்டுமே ஆயுதப்படைகளில் தக்கவைக்கப்படுவார்கள். மீதமுள்ள 75 சதவீதத்தினர் சேவையிலிருந்து வெளியேற்றப்படுவார்கள், என்ற தகவலையும் வழக்கறிஞர் ஷர்மா தனது மனுவில் குறிப்பிட்டுள்ளார்.

# உள்ளக உதைபந்தாட்ட அரங்கு அக்கரைப்பற்றில் திறந்து வைப்பு





(நூருல் ஹுதா உமர்)

பிராந்திய இளைஞர்களின் விளையாட்டுத் திறனை மேம்படுத்தும் எண்ணக்கருவில் அக்கரைப்பற்று மாநகர சபையின் நிதி ஒதுக்கீட்டில் அக்கரைப்பற்று நீர்ப்பூங்கா வளாகத்தில் நிர்மாணிக்கப்பட்டுள்ள உள்ளக உதைபந்து அரங்கை (Futsal) பொது மக்கள் பாவனைக்குத் திறந்து வைத்துக் கையளிக்கும் நிகழ்வு அண்மையில் அக்கரைப்பற்று மாநகர முதல்வர் அதாஉல்லா அகமட் ஸகி தலைமையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வின் போது தேசிய காங்கிரஸ் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான ஏ.எல்.எம்.அதா உல்லா பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உள்ளக அரங்கின் முதலாவது உதைபந்து போட்டியைத் தொடக்கி வைத்தமையுடன், இவ்வரங்கில் இடம்பெறும் முதல் போட்டியில் விளையாடிய வீரர்களுக்கு நினைவுச் சின்னங்களையும் வழங்கி வைத்தார்.

பிராந்திய விளையாட்டு வீரர்களின் ஆட்டத்திறனை ஊக்குவித்து,அவர்களைத் தேசிய மற்றும் சர்வதேச தரம் வாய்ந்த வீரர்களாய் பட்டை தீட்டுவதுடன் ஆரோக்கியமும், ஒழுக்க விழுமியங்களும் மிகுந்த இளைஞர் சமுதாயத்தினை கட்டியெழுப்புவதும் இவ்வுள்ளக மைதானம் உருவாக்கப்பட்டதன் பிரதான நோக்கங்கள் ஆகும் என மாநகர பிதா அதாஉல்லா அகமட் ஸகி இந்நிகழ்வின் போது சுட்டிக்காட்டினார்.

இதன்போது அக்கரைப்பற்று பிரதேச சபை தவிசாளர் எம்.ஏ. றாஸிக், மாநகர சபை, பிரதேச சபை உறுப்பினர்கள், பிரதேச முக்கியஸ்தர்கள், விளையாட்டு கழகப் பிரதானிகள், விளையாட்டு வீரர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

## தாக்குதலில் மிளகாய் வீச்சு 5 சிறுவர் ஆஸ்பத்திரியில்!

(பைல் இஸ்மாயில்)

திருகோணமலை–ரொட்ட வெவ மிரிஸ்வெவ பகுதியில் இரு சிறுவர் குழுக்களுக் கிடையே ஏற்பட்ட கைகலப்பில் 5 பேர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இச்சம்பவம் நேற்றுக் காலை இடம்பெற்றுள்ளது.

கடந்த 3 நாள்களுக்கு முன்னர் ஏற்பட்ட கைகலப்புடன் தொடர்புடைய குறித்த இரு குழுக்களுக்கிடையே தொடர்ந் தும் முறுகல் நீடித்து வந்துள் ளது.

இந்நிலையில் நேற்று கடைக்குச் சென்ற சிறுவன் ஒருவன் தாக்கப்பட்டமையை அடுத்து மோதல் இடம்பெற் றுள்ளது . அதில் மிளகாய்த் தூள் வீசித் தாக்குதல் நடந்த தாகவும் கூறப்பட்டது. இதனால் மூன்று சிறுவர்கள் மஹதிவுல் வெவ பிரதேச வைத்தியசாலை யில் அனுமதிக்கப்பட்டனர்.

இதேவேளை மற்றைய குழுவில் உள்ள இரு சிறுவர் களும் தாம் தாக்கப்பட்டனர் எனத் தெரிவித்து அம்புலன்ஸ் மூலம் வைத்தியசாலைக்குக் கொண்டுசெல்லப்பட்டுள்ளனர்.

அந்த ஐந்து சிறுவர்களில் மூவர் மேலதிக சிகிச்சைக்காக திருகோணமலை பொது வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டனர் எனத் தெரியவருகிறது. இந்த சிறுவர்கள் அனைவரும் 16 வயதிற்கு உட்பட்டவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

இச்சம்பவம் தொடர்பில் மொரவெவ பொலிஸார் மேல திக விசாரணைகளை மேற் கொண்டு வருகின்றனர்.

## மௌலவிமார்களை கௌரவிக்கும் நிகழ்வு வாழைச்சேனை நாவலடியில்





வாழைச்சேனை– நாவலடி அந்நூர் அகாட மியில் இஸ்லாமியக் கல்வியினை நிறைவு செய்து பட்டம் பெற்ற மௌலவிமார்களை கௌரவிக்கும் நிகழ்வு கடந்த 16 ஆம் திகதி இடம்பெற்றது.

அந்நூர் அகடமியின் அதிபர் அலியார் ஹபீப் ஹாஸிமி தலைமையில் இடம்பெற்ற இந் நிகழ்வில், பட்டம் பெற்ற 8 மௌலவிமார்கள் சான்றிதழ்கள் மற்றும் நினைவுச் சின்னங்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

இந்நிகழ்வில், அதிதிகளாக மருதமுனை தாருல் ஹுதா மகளிர் அரபுக் கல்லூரியின் பணிப்பாளர் கலாநிதி எம்.எல்.முபாறக் மதனி, வாழைச்சேனை மத்தி பிரதேச செயலக கலாசார உத்தியோகத்தர் ஏ.எல்.பீர் முகம்மத் காஸிமி, கல்குடா ஜம்இய்யது உலமா தலைவரும் சிறாஜியா அரபுக் கல்லூரியின் தலைவருமான எம்.எம்.தாஹீர் ஹாமி மற்றும் ஆசிரியர்கள், மௌலவிமார்கள் எனப்பலரும் கலந்து கொண் டனர்.

## காத்தான்குடி பள்ளிவாசலில் மாகந்தூரி பெருவிழா நிகழ்வு







(எஸ்.எஸ்.அமிர்தகழியான்)

மட்டக்களப்பு – காத்தான்குடி பத்ரிய்யஹ் ஜும்ஆஹ் பள்ளிவாசலில் 36 ஆவது வருட ஹாஜாஜீ மாகந்தூரி பெருவிழா கடந்த வெள்ளிக்கிழமை பிற்பகல் கொடியேற்றத்துடன் ஆரம்பித்து ஞாயிற்றுக்கிழமை இரவு இனிதாக நிறைவுபெற்றது.

பெருவிழாவின்போது மஜ்லிஸ்கள் பல இடம்பெற்று ஞாயிறு இரவு பல ஆயிரக்கணக்கான பொதுமக் களுக்கு கந்தூரி உணவு விநியோகிக்கப்பட்டது.

இறுதிநாள் நிகழ்வில் வருகை தந்த அதிதிகள் மலர் மாலை அணிவித்து வரவேற்கப்பட்டனர். தேசியக் கீதம் இசைக்கப்பட்டதைத் தொடர்ந்து கந்தூரி சமைத்த உணவு தானமாக வழங்கப்பட்டது.

அதனையடுத்து விசேட வழிபாடுகள் இடம்பெற்றன. இதன்போது நாடு தற்போது எதிர்கொண்டுள்ள பொருளாதார நெருக்கடியில் இருந்து மீண்டுவர வேண்டுமென பிரார்த்தனை மேற்கொள்ளப்பட்டமை குறிப்பிடத்தக்கது. பத்ரிய்யஹ் ஜும்ஆ பள்ளிவாசல் தலைவர் மௌலவி ஏ.ஜே.அப்துர் ரஊப் (மிஸ்பாஹி) தலைமையில் இடம்பெற்ற இறுதி நாள் பெருவிழாவில் கிழக்கு மாகாண சிரேஷ்ட பொலிஸ்மா அதிபர் ராஜாத சிறி தமிந்த, கிரான்குளம் இராணுவ தளபதி மேஜர் உதய குமார, பள்ளிவாயல் நம்பிக்கை சபை உறுப்பினர்கள், பொது மக்கள் என பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

# இந்த அரசால் நாட்டுக்கு எந்தப் பயனுமே இல்லை

## நாடாளுமன்றில் அநுரகுமார சாட்டை



கொழும்பு,ஜூன்21

புதிய பிரதமரை நியமித்து ஒரு மாதத்துக்கும் மேலாகியும் தற்போதைய நெருக்கடிக்கு உரிய பதில் கிடைக்காததால் நாடாளுமன்றத்தை புறக்கணிக்க தீர்மானித்துள்ளதாக நாடாளுமன்ற உறுப்பினர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள நெருக்கடியின் பேச்சாளராக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மாறியுள்ளார் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

மக்களால் நிராகரிக்கப்பட்ட ரணில் விக்கிரமசிங்கவை பிரதமராக நியமிப்பதற்கு ஜனாதிபதி தனது அதிகாரங்களைப் பயன்படுத்தினார் என அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

நாடாளுமன்றத்தில் இன்று (செவ்வாய்க்கிழமை) உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதன்போது மேலும் தெரிவித்த அவர் –

நாட்டில் நெருக்கடி ஏற்பட்டு சில மாதங்களுக்குப் பின்னர், நாடாளுமன்றம் கூடியது.

நாடாளுமன்றத்தில் நடக்கும் விவாதங்கள் எதுவும் மக்களின் வாழ்வாதாரத்தை உயர்த்த உதவவில்லை. மக்களின் குரலை அல்லது நலன்களை பிரதிநிதித்துவப்படுத்தாத இடமாக நாடாளுமன்றம் மாறியுள்ளது.

ஜனாதிபதியும் தற்போதைய பிரதமரும் இரகசியமாக அரசாங்கத்தை அமைத்தனர்.

புதிய பிரதமர் பதவியேற்று ஒன்றரை மாதம் நிறைவடைந்துவிட்டது. நெருக்கடியைத் தீர்ப்பதற்குப் பதிலாக, நெருக்கடியின் செய்தித் தொடர்பாளராக ரணில் மாறியுள்ளார்.

இந்த அரசை மக்கள் நம்புகிறார்களா? இந்தப் பிரச்சினைகளில் ஏதேனும் அல்லது அனைத்தும் தீர்க்கப்படும் என்று நம்புகிறீர்களா? இவ்வாறிருக்க, பிரதமரும் அவரது அமைச்சரவையும் அவர் கொண்டு வந்த அரசாங்கமும் மிகக் குறுகிய காலத்தில் இந்தப் பிரச்சினைகளுக்குத் தீர்வை வழங்க முடியாது என்பதை இன்று நிரூபித்துள்ளது.

எனவே, இந்த நாடாளுமன்றத்தில் நேரத்தை வீணடிப்பதன் மூலம் எண்ணெய் வரிசையில் நிற்கும் நபருக்கு பதில் கிடைக்கும் என்று நான் நினைக்கவில்லை. பால் இல்லாதவர்களுக்கு பதில் இல்லை. அப்படியென்றால் நாடாளுமன்றத்தில் திட்டவட்டமான யோசனையை முன்வைக்காமல் அரசாங்கம் இந்த நெருக்கடியிலிருந்து எப்படி மீள்வது? இந்த நெருக்கடியை எவ்வாறு சமாளிப்பது? என இந்த அரசாங்கம் மிகக் குறுகிய காலத்தில் ஒரு நிகழ்ச்சி நிரலை முன்வைக்க வேண்டும்.

எனவே, இவ்வாறானதொரு நிகழ்ச்சி நிரலை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்காமல் இவ்வாறான விவாதங்களை நடத்துவதில் அர்த்தமில்லை.

எனவே இந்த வாரம் நாடாளுமன்றத்தை புறக்கணிக்க அனைவரும் தீர்மானித்துள்ளோம். அரசுக்கு கால அவகாசம் வழங்கப்படும் – என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## பெருந்தொகை நகை கொழும்பில் அபேஸ்!

கொழும்பு, கொள்ளுப்பிட்டி, பித்தல சந்தியில் உள்ள இரத்தினக்கல் மற்றும் நகைக்கடை உடைக்கப்பட்டு 150 கோடி ரூபாவுக்கும் அதிக பெறுமதியான இரத்தினக்கற்கள் மற்றும் ஆபரணங்கள் திருடப்பட்ட சம்பவம் தொடர்பிலான விசாரணைகளை கொம்பனித்தெரு பொலிஸார் முன்னெடுத்துள்ளனர்.

கடந்த 18ஆம் திகதி அதிகாலை 5.00 மணிக்கும் 7.00 மணிக்கும் இடையில் இந்த திருட்டு இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இதன்உரிமையாளர்வழங்கியமுறைப்பாட்டின்பேரில், பொலிஸார் விசாரணை மேற்கொண்டுள்ளனர் சந்தேகநபர் கடையின் இரும்புக் கதவுகளை உடைத்து இரத்தினக்கற்கள் பதித்த தங்க நகைகள் உட்பட பல நகைகளைத் திருடிச் சென்றுள்ளார் என விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

தலைக்கவசம் மற்றும் முகமூடி அணிந்து கடைக்குள் நுழைந்த காட்சிகள் சி.சி.ரி.வி. கமராவில் பதிவாகியுள்ளன. அதனை அடிப்படையாக வைத்து சந்தேகநபரைக் கைது செய்வதற்கான நடவடிக்கையை பொலிஸார் முன்னெடுத்துள்ளனர்.





## கிழக்கு ஆளுநர் செயலகத்திலும் வீட்டுத் தோட்டம்

(ஹஸ்பர)

திருகோணமலையில் உள்ள கிழக்கு மாகாண ஆளுநர் செயலக தோட்டத்தில் – மாகாணத்தில் உள்ள ஒவ்வொரு அரச நிறுவனமும் முன்மாதிரி தோட்டம் அமைக்க எடுத்த தீர்மானத்தை உணர்த்தும் வகையில் – கிழக்கு மாகாண ஆளுநர் அனுராதா யஹம்பத் புதிய மரக்கன்றுகளை அண்மையில் நட்டு வைத்தார்.

மாகாண விவசாய திணைக்களத்தின் ஏற்பாட்டில் பெறப்பட்ட இந்த மரக்கறி நாற்றுகள் மற்றும் விதைகள் ஆளுநர் மற்றும் அலுவலக அதிகாரிகளினால் தோட்டத்தில் நடப்பட்டது. இதேவேளை, கிழக்கு மாகாண சபையில் உள்ள அனைத்து அரச நிறுவனங்களின் தலைவர்களும் முன்மாதிரியான வீட்டுத் தோட்டத்தை அமைக்குமாறு ஆளுநர் வலியுறுத்தியுள்ளார்.

எதிர்நோக்கவிருக்கும் உணவுப் பற்றாக்குறையை எவ்வாறு வெற்றிகரமாகச் சமாளிப்பது என்பது குறித்து பொதுமக்களுக்குக் கற்பிப்பதற்கான முக்கிய அங்கமாக அரச நிறுவனங்களால் மாதிரி வீட்டுத்தோட்டத் திட்டங்களை நடைமுறைப்படுத்துவது இத் திட்டத்தின் விசேட அம்சமாகும்.

# மட்டு.சித்தாண்டி சந்தணமடு வீதி மக்கள்பாவனைக்குக்கையளிப்பு







(எஸ்.எஸ்.அமிர்தகழியான்)

நாடாளுமன்ற உறுப்பினரும் மாவட்ட அபிவிருத்திக்குழுவின் இணைத்தலைவருமான சிவநேசதுரை சந்திரகாந்தனின் பரிந்துரைக்கு அமைவாக – ஒரு லட்சம் கிலோமீற்றர் வீதி அமைக்கும் திட்டத்தின் கீழ் – சித்தாண்டி சந்தணமடு வீதி மற்றும் மாரி அம்மன் கோவில் வீதிகள் என்பன பத்துக் கோடி ரூபாவுக்கு மேற்பட்ட நிதி ஒதுக்கீட்டின் கீழ் புனரமைப்புச் செய்யப்பட்டு பொது மக்களிடம் கையளிக்கப்பட்டுள்ளது. பிரதேசபை உறுப்பினர் நவரெத்தினம் திருநாவுக்கரசு தலைமையில் நாடாளுமன்ற உறுப்பினர் சிவநேசதுரை சந்திரகாந்தன் பிரதம அதிதியாகக் கலந்துகொண்ட இந்நிகழ்வில் சந்தணமடு ஆற்றை அண்டிய பிரதேசங்களிலும் ஈரலக்குளம் போன்ற பிரதேசத்திலுள்ள விவசாயிகளின் வாழ்வாதாரத்தினை உயர்த்துமுகமாக சிவநேசதுரை சந்திரகாந்தனின் பன்முகப்படுத்தப்பட்ட நிதியிலிருந்து 17 லட்சம் ரூபா பெறுமதியான விவசாய உபகரணங்களும் இதன் போது வழங்கிவைக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம், இல-551A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 21.06.2022இல் வெளியிடப்பெற்றது.